₹100/-

ஞானகுரு

4 - 3

# மகிழ்ச்சி

பங்குனி 2025

எஸ்.கே.முருகன்



## உயிர் எங்கே போகிறது?

# ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639




க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.




ஆசிரியர் பக்கம்

# யாருடன் நாம் போட்டியிட வேண்டும்..?



ஊரில் லட்சக்கணக்கான நபர்கள் புதிய கார் வாங்குகிறார்கள். அவர்களை யாரும் போட்டியாளராகக் கருதுவதில்லை. யார் யாரோ பங்களா கட்டினாலும் மக்கள் கவலைப்படுவதில்லை. ஊரில் சுற்றுலாபயணிகள் யாரைப் பார்த்தாலும் பொறாமை கொள்வதில்லை.

ஆனால், உறவினர்கள், நண்பர்கள், பக்கத்துவீட்டுக்காரர்களை போட்டியாளர்களாகக் கருதுகிறார்கள். அவர்களை விட கொஞ்சமாவது சிறப்பாக வாழ வேண்டும் என்று சபதம் செய்கிறார்கள்.

பக்கத்து வீட்டுக்காரர் செடி வளர்த்தால், இவர்களும் வளர்க்கிறார்கள். உறவினர் காசிக்கு போனால் இவர்களும் போகிறார்கள். நண்பர் பழைய வண்டியை மாற்றிவிட்டு புதியது வாங்கினால், தாங்களும் அப்படி வாங்கத் துடிக்கிறார்கள். பிள்ளை முதல் மதிப்பெண் வாங்கும் அவசியமில்லை, பக்கத்துவீட்டுப் பையனை விட இரண்டு மதிப்பெண் கூடுதலாக வாங்கினால் போதும்.

சாலை பயணத்தில் சிலர் முந்திக்கொண்டு செல்வார்கள். அவரை முந்த வேண்டும் என்று போட்டியிடும்போது, உங்கள் பயண வேகத்தை அவர் தீர்மானித்துவிடுகிறார். அப்படித்தான் அடுத்தவர்களைப் பார்த்து, அவர்களைப் போன்று வாழ்வதற்கு ஆசைப்பட்டு தங்கள் சொந்த வாழ்க்கையை இழந்துவிடுகிறார்கள். அடுத்தவர் போன்று வாழ்வது தான் மகிழ்ச்சி என்று நினைக்கிறார்கள்.

வாழ்க்கையில் நிறைய பேர் வருவார்கள், செல்வார்கள். அவர்களை போட்டியாளராக நினைத்தால் நம் மகிழ்ச்சி பறி போய்விடும். அடுத்தவர் வாழ்க்கையில் கவனம் வைக்காமல் நமது வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வதே போதும். யாரையும் போட்டியாளராக நினைக்க வேண்டாம். நம்மைப் போன்று அடுத்தவர் வாழ வேண்டும் என்றும் நினைக்க வேண்டாம்.

எனவே, போட்டியிடுவது என்றால் உங்களுடனே நீங்கள் போட்டியிடுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்காக போட்டியிடுங்கள். உங்கள் லட்சியத்துக்காகப் போட்டியிடுங்கள். குடும்ப ஒற்றுமைக்காகப் போட்டியிடுங்கள். இதுவே மகிழ்ச்சி.

# உடல் பசிக்கும் நேரத்தில்
## என்ன செய்ய வேண்டும்?



“ஒரு சில நேரங்களில் கட்டுக்கடங்காத பாலியல் உணர்வு உண்டாகிறது. இதை புறக்கணிக்க நினைத்தாலும் முடிவ தில்லை. இதுபோன்ற தருணங்களில் என்ன செய்ய வேண்டும்?” ஞானகுருவிடம் கேள்வி எழுப்பினார் மகேந்திரன்.

“காமம் என்பது இயல்பான ஒன்று. காட்டு மிருகங்கள், பறவைகள் காம உணர்வு தோன்றுகையில் அதை எப்படியேனும் தணிக்கவே அலையும். அதற்காக கடும் முயற்சி எடுத்துக் கொள்ளும். இனப்பெருக்கத் துக்காக மட்டுமே அந்த காமம் என்பதால் அதனை தணிக்கும் வரை அந்த நிலை கட்டுப் படவே கட்டுப்படாது. அது உயிரியல் விதி.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



**மந்திரச் சொல்**

உங்கள் உணர்ச்சிகளை பிறர் முன்பு காட்டாதீர்கள். யாருக்கும் அதைப் பற்றிய அக்கறை இல்லை.

அதே வகையில், மனிதர்களுக்கு வயிற்றுப் பசி போன்று உடல் பசி ஏற்படுவதும் இயல்பான உணர்வு. ஆனால், மிருகங்களைப் போன்று எதிர்பாலினத்தை விரட்டியும், அடக்கியும் இந்த ஆசையைத் தணிக்க முடியாது, கூடாது. அப்படி அடாவடியாக காமத்தை தணிக்க முயல்பவர், பாலியல் வன்கொடுமை வழக்குகளில் சிக்கி வாழ்க்கையைத் தொலைத்துவிடுகிறார்கள்.

குடும்ப உறவுக்குள் இருப்பவர் என்றாலும், ஆசை வரும் நேரத்தில் எல்லாம் உடல் பசியைத் தணித்துவிட முடியாது. ஆண்கள் சட்டென மிக எளிதில் காம வயப்படுவார்கள். சட்டென்று உணர்வுபூர்வமாக மாறுவார்கள். ஆனால், பெண்கள் எல்லா நேரமும் காமத்தை ஏற்பதற்குத் தயாராக இருப்பதில்லை. அவர்களால் திடீரென காமவயப்பட முடியாது.


எனவே, கட்டுக்குள் வராத காம உணர்வில் தவிப்பவர்கள் தனிமையில் இன்பம் காண்பது மட்டுமே பாதுகாப்பான சுலப வழி. இதற்கு விருப்பம் இல்லையென்றால், காம வயப்படும் நேரத்தில் மனதை வேறு ஏதேனும் புதிய விஷயத்தில் திசை திருப்ப வேண்டும். அதாவது தனிமையில் இருந்து வெளியேறி பொது வெளிக்கு வருவது நல்லது. ரோட்டில் செல்பவர்கள், அக்கம்பக்கத்தில் கடுமையாக உழைப்பவர்களைப் பார்த்தாலே மனதில் இருக்கும் ஆசை ஓடிவிடும். அது போன்ற தருணங்களில் தெரிந்த நண்பர்கள், உறவினர்களிடம் பேசுவதன் மூலம் மனதை முழுமையாக திசை திருப்பிவிடலாம்.

உடல் பசியை கட்டிலில் மட்டுமே அடக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனைவி, குழந்தைகளுடன் சிரித்து மகிழ்வாகப் பேசுவது, ஏதேனும் வேலை செய்து உதவுவது, பிறரை சிரிக்க வைத்து மகிழ்வது போன்ற செயல்கள் மூலமாகவும் இதனை தணித்துக்கொள்ள முடியும். பெண்கள் தங்கள் உணர்வை இப்படித் தான் தணித்துக்கொள்கிறார்கள்.

பெரும்பாலான பெண்கள் காமத்தை தங்கள் பாசத்தின் மூலம், அன்பின் மூலம் காட்டி திருப்தி அடைந்துகொள்கிறார்கள். நாகரிக உலகத்தில் இந்த கட்டுப்பாடுள்ள காமமே நல்லது. காமத்தின் மீது பழி போட்டு அடுத்தவரை பயனபடுத்துவதும் துன்புறுத்துவதும் முறையல்ல. சட்டத்தின் முன்பு மட்டுமல்ல, மனிதத் தன்மைக்கே எதிரானது” என்றார் ஞானகுரு.







# கவித்துவம்

தவறுதலாக
தவளைக் குஞ்சொன்றை
மிதித்து அழித்துவிட்டேன்
எத்தனை காலம்
அது என்னில் ஓலமிட்டு திரியுமோ?
எத்தனை காலம்
என் உறக்கத்துக்கு குறுக்கே நிற்குமோ?
தாய்த் தவளையின் சாபத்தால்
எத்தனை இரவுகள்
தவ்விக் குதித்து எழுவேனோ?
இத்தனை இடங்களுக்கும் பதிலாக
பாப்பா சொன்னது போலவும் நடக்கலாம்
அடுத்த பிறவியில்
நான் தவளையாகவும்
தவளை பூபாலனாகவும் மாற,
நான் நசுங்கிச் சாவேன்
பூபாலன் புழுங்கிச் சாவான்


– இரா பூபாலன்

# கடவுள் விலை 1,500 ரூபாய் | கழுதை விலை 1,500 ரூபாய்

## இம்புட்டுத்தான் தத்துவம்

சுவாமிமலையில் கலைப்பொருட்கள் வடித்து விற்பனை செய்கிறார் சிற்பி ராசன். இவர் சிலை வடிப்பாளர் மட்டுமல்ல, சமூக செயற்பாட்டாளர், இறைமறுப்பாளர். சிற்பகலையை முறைப்படி கற்றுள்ள ராசனின் கருத்துகள் வித்தியாசமானவை. அவரது ஒரு பேட்டியின் சுருக்கம் இது.

“ஒரு முறை இசைஞானி இளையராஜா எனது சிற்பக்கூடத் திற்கு வந்திருந்தார். அப்போது நியூசிலாந்து நாட்டிலுள்ள ஒரு இந்து கோவிலுக்காக 3 அடி உயரமும் சுமார் 300 கிலோ எடையும் உள்ள ஒரு பிள்ளையார் சிலை செதுக்கிக் கொண்டிருந்தேன். இசை ஞானியார் இந்தச் சிலையை தொட்டுப் பார்க்கலாமா? என்று கேட்டார். அதற்கு நான் உற்பத்தியாகும் இடத்தில் யார் வேண்டுமானாலும் தொடலாம். கோவிலுக்குள் போன பிறகு இரண்டு பேர் தான் தொட முடியும் என்று கூறினேன்.



அதற்கு அவர், ‘கோவிலுக்குப் போன பிறகு அர்ச்சகர் மட்;டும்தானே தொட முடியும்? இன்னொரு நபர் யார்?’ என்று கேட்டார். பூசை என்கிற பெயரில் தினம் திருடும் திருடனும் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் பூட்டை உடைத்துத் திருடும் திருடனும் மட்டும் தான் தொட முடியும். என்று சொன்னேன். பக்தியுடன் போகும் நீங்களும் தொடமுடியாது, சிலையை வடித்த நானும் தொட முடியாது என்ற உண்மையைக் கூறினேன்.

நீங்கள் ஒரு நாத்திகராக இருந்து கொண்டு ஏன் கடவுள் சிலைகளைச் செய்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான், ‘என்னிடம் 75 தொழிலாளர் கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கணும். மேலும் சுவாமிமலை கடவுள் சிலை உற்பத்திக்கு பெயர் போனது. இங்கு வருபவர் கள் 100 சதவீதமும் கடவுள் சிலை வாங்கவே வருபவர்கள்; அவர்களிடம் நான் நாத்திகம் பேசினால் 75 குடும்பங்களின் கதி என்னவாகும்? என்னிடம் வாங்குபவர்கள் தான் அதை கடவுள் என்கிறார்கள்.





www.gyaanaguru.com



> நீங்கள் செய்யும் சிலைகளில் சக்தி ஒன்றும் கிடையாது! நாங்கள் (ஆரியர்கள்) மந்திரம் சொல்லி பூசை செய்து தரும் இந்த யந்திரத் தகட்டில் தான் எல்லா சக்திகளும் இருக்கிறது.

என்னைப் பொருத்தவரை அது ஒரு உருவம்தான். ஒருவன் கையில் வேல் கொடுத்தால் அவன் முருகன். வேலைப் பிடுங்கி வில்லைக் கொடுத்தால் அவன் ராமன். அதையும் எடுத்து விட்டு புல்லாங்குழல் கொடுத்தால் அதே சிலை கிருஷ்ணன் ஆகி விடுகிறது. ஆகவே ஆயுதத்தை வைத்துத்தான் நம் கடவுளை அடையாளம் காணமுடிகிறது. மேலும் என்னிடம் கடவுள் சிலையென்று கேட்டாலும் கழுதை, நாய், பன்றி என எதைக் கேட்டாலும் எல்லாமே கிலோ 1500 ரூபாய் தான். இவை அனைத்திற்கும் பயன்படுத்தப்படும் உலோகமும் கருவிகளும் ஒன்று தான். கடவுளுக்கென்று தனியாக எதுவும் கிடையாது!

அதுமட்டுமல்லாமல் நான் கற்றுக் கொண்ட தொழில் உலோகத்தை உருக்கி வாடிக்கையாளர் கேட்பதைச் செய்து கொடுப்பது தான் என் வேலை. கடவுள் சிலை செய்வதற்கு கடவுளின் அருள் இருந்தால் தான் முடியுமென்றால் சங்கராச்சாரி முதல் கிருபானந்தவாரியார் வரை எல்லா பக்தர்களும் சிலை செய்யலாமே? ஏன் அவர்களால் செய்ய முடியவில்லை என்றால் அவர்கள் எங்களைப் போல் அந்தத் தொழிலை கற்றுக் கொள்ளவில்லை என்பது தான்.

கோவிலுக்காக சிலைகளைச் செய்யும் போது சிற்பிகளை கேவலப்படுத்துவது போல ஆரியர்கள் சூழ்ச்சி ஒன்றை செய்வார்கள். “நீங்கள் செய்யும் சிலைகளில் சக்தி ஒன்றும் கிடையாது! நாங்கள் (ஆரியர்கள்) மந்திரம் சொல்லி பூசை செய்து தரும் இந்த யந்திரத் தகட்டில் தான் எல்லா சக்திகளும் இருக்கிறது. இதை சிலையின் கீழே பீடத்தில் வையுங்கள்|| என்று சொல்லி ஒரு தகட்டினைத் தருவார்கள். இதுவரை ஒரு சிலையில் கூட நான் அந்தத் தகட்டை வைத்தது கிடையாது!

அதற்கு பதிலாக தந்தை பெரியார் அவர்கள் சொன்ன மூல மந்திரமாகிய கடவுள் இல்லை! கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை! கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்! கடவுளைப் பரப்பினவன் அயோக்கியன்! கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி! என்ற வாசகத்தை வைத்துத்தான் அனுப்பி இருக்கிறேன். எந்த ஒரு கடவுளும் இது வரை அந்தத் தகட்டினை அகற்றவில்லை. சூத்திரர்களாகிய நாம் செய்யும் சிலைகளில் சக்தி இல்லையாம்! இவன்கள் கொடுக்கும் யந்திரத் தகட்டில் தான் சக்தியாம். அதற்காகத் தான் நாத்திக யந்திரத் தகடுகளை நான் பதித்துள்ளேன்” என்று கூறியிருக்கிறார்.

இதையும் கடவுள் விருப்பம் என்று அவர்கள் ஒரு கதை சொல்லாமல் இருந்தால் சரிதான்.







# மனிதரை காப்பாற்ற

## வேண்டியது யார் பொறுப்பு..

**விஜய் சேதுபதியின் மதம், மனிதம்**


மனிதர்கள் கூடி வாழும் இனத்தைச் சேர்ந்த வர்கள். அதனாலே காலம் காலமாக பல்வேறு ஆதிக்கத்திற்கு அடிமையாக இருக்கிறார்கள். மன்னருக்கு அடிமையாக இருந்தார்கள், அன்னியர் களுக்கு அடிமையாக இருந்தார் கள். இவை எல்லாம் வெளிப்படையாகத் தெரிந்த அடிமைத்தனம். அதனால், அதிலிருந்து வெளியே வந்துவிட்டார்கள்.

ஆனால், இன்னும் மனிதர்கள் வெளியே வர முடியாத ஆதிக்கம் நிறைய இருக்கின்றன. சாதிய ஆதிக்கத்திலிருந்து மக்களால் இன்னமும் முழுமையான விடுதலை பெற முடியவில்லை. ஆண்கள் ஆதிக்கத்திலிருந்து பெண் களால் முழுமையான விடுதலை பெற முடியவில்லை.

சந்தை ஆதிக்கத்திலிருந்து மக்களால் வெளியே வர முடியவில்லை விளம்பரங் களைப் பார்த்து தேவையில்லாதவற்றை வாங்கிக்குவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். இந்த பொருளை வாங்க வில்லை என்றால் மகிழ்ச்சி கிடைக்காது என்று ஏமாற்றும் சந்தை ஆதிக்கத்தை தவிர்க்க வேண்டும் என்ற மாயை மக்களுக்குப் புரிவதில்லை. போர் ஆதிக்கத்திலிருந்து மக்கள் இன்னமும் வெளியே வர முடிய வில்லை. அதனாலே உலகின் ஒட்டுமொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 40% ராணுவத்துக்கு செலவிடப்படுகிறது. இந்த பணம் இருந்தால் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் வறுமை



"கடவுள் என்று ஒருவர் இருந்தால், அவர் மனிதரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வார்."



யில் இருந்தும் நோயில் இருந்தும் காப்பாற்றிவிட முடியும். இதனை செய்வதற்கு எந்த அரசும் முன்வருவதில்லை.

மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் அரசுகள் செய்ய வேண்டிய கடமை. அடிப்படை வசதிகள் கிடைக்கும்போது தனி மனிதன் மகிழ்ச்சி அடைந்துவிடுவான். அவனது குடும்பம் மகிழ்ச்சி அடைந்துவிடும். இது, நாட்டுக்கும் உலகிற்கும் நல்ல செய்தி. ஆனால், இன்றைய அரசுகள் தனி மனிதர்களின் மகிழ்ச்சி குறித்தும், அடிப்படைத் தேவைகள் குறித்து கவலைப்படுவதில்லை.

நாட்டில் கோயில்கள் கட்டுவதற்கும் கும்பமேளா நடத்துவதற்கும் ஆர்வமாக இருக்கிறார்கள். மொழிக்காகவும், இனத்துக்காகவும் போராட்டம் நடத்துவதற்கு மக்களைத் தூண்டுகிறார்கள். இவை எதுவுமே மனிதரின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்க்கப் போவ தில்லை என்பது தெரிந்தும் அரசுகள் மக்களை முட்டாளாக்குகின்றன.

மனிதரைக் காப்பாற்றுவதற்கு உருவாக்கப்பட்டவரே கடவுள். அவரை வழிபடுவதற்கு வகுக்கப்பட்ட நியதிகளே மதம். ஆனால் இப்போது கடவுளையும் மதத்தை யும் காப்பாற்ற வேண்டிய கடமை மக்களுக்கு இருப்பதாக ஆட்சியாளர்கள் பேசுகிறார்கள்.

கடவுளைக் காப்பாற்ற வேண்டியது மனிதரின் பொறுப்பா..?

இந்த விஷயத்தில் நடிகர் விஜய் சேதுபதிக்கு இருக்கும் தெளிவு கூட இன்றைய அரசியல்வாதி களுக்கு இல்லை. கடவுள் குறித்து விஜய் சேதுபதி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா..?

”கடவுளுக்காகச் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை. நாம் அனைவரும் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் இங்கு பலகோடி வருடங்களாக இருக்கிறது. ஆனால், கடவுள் இன்னொரு கடவுளைக் காப்பாற்றும் மகா மனிதரைப் படைக்கவே இல்லை. கடவுளைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லும் எந்தவொரு கூட்டத்துடனும் தயவு செய்து பழகாதீர்கள். அது ரொம்பவே முக்கியம்.

கடவுளைச் சாதாரண மனிதனால் காப்பாற்றவே முடியாது. அது பொய், அதெல்லாம் நம்பவே நம்பாதீர்கள். யாராவது இது தொடர்பாக உங்களிடம் பேசினால், திருப்பி என்னுடைய மதத்தில் என்ன சொல்கிறது என்றால் என்ற பதிலைச் சொல்லாதீர்கள். அதற்குப் பதிலாக மனிதத்தையும் மனித நேயத்தையும் சொல்லிக் கொடுங்கள். மனிதரை மதிக்கச் சொல்லிக் கொடுங்கள்.


கடவுள் மேலே இருக்கிறார். மனிதன் தான் பூமியில் இருக்கிறான். ஆகையால் மனிதனை மனிதனால் தான் காப்பாற்ற முடியும். இது மனிதர்கள் வாழுவதற்கான இடம். மனிதன் சகோதரத்துவத்துடன் சந்தோஷமாக அன்பைப் பரிமாறிக் கொண்டு வாழவேண்டும். மதத்தைச் சொல்லி கடவுளையே பிரிக்கிறார்கள். கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே மதம் அவசியமில்லாதது.” என்று கூறுகிறார்.

இந்த தெளிவு ஒவ்வொரு மனிதருக்கும் முக்கியம். மனிதர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மனிதர்களுக்கே இருக்கிறது. கடவுளுக்கு இங்கு எந்த வேலையும் இல்லை. கடவுளைக் காப்பாற்ற வேண்டியது மனிதரின் கடமையும் இல்லை.

கடவுள் என்று ஒருவர் இருந்தால், அவர் மனிதரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வார்.







# பணத்தைக் காதல் செய்யுங்கள்

## அம்பானி ஜெயித்த ரகசியம்

பணம் எப்போது மனிதனை தேடி வரும் என்றால், ஏதாவது ஒரு துறையில் தனித்திறமையைக் காட்டி வெற்றி அடையும்போது பின்னாலே பணமும் வந்து சேரும். கூலி வேலை செய்பவர்கள், மாத சம்பளத்துக்கு வேலை பார்ப்பவர்கள் நிம்மதியான வாழ்வு போதும் என்று நினைப்பதால், பெரிய அளவுக்கு பணம் எதிர்பார்ப்பதில்லை, அதற்கான தகுதி தங்களிடம் இல்லை என்றே நினைப்பதால், அவர்களைத் தேடி பெரிய அளவுக்கு பணம் வருவதில்லை.

ஒருவன் தன்னுடைய திறமையை காட்டவேண்டும், ஏதேனும் லட்சியத்தை அடையவேண்டும் என்று முடிவெடுத்தால்... அவன் வெற்றிக்கு போனஸாக பணமும் வந்துசேரும். முதல் முயற்சியில் யாருக்கும் வெற்றி கிட்டுவதில்லை. தோல்விகளை ஏற்றுக்கொண்டு முயற்சியை கைவிடாமல் மீண்டும் மீண்டும் லட்சியத்தை நோக்கி முன்னேறும்போது வெற்றி கிடைத்துவிடும். அந்த வெற்றியால் புகழ், பணம், செல்வாக்கு போன்றவையும் கிடைக்கும். ஓர் ஏழையால் கோடீஸ்வரனாக முடியுமா என்று கேட்டால், நிச்சயம் முடியும் என்று உறுதியாக சொல்லலாம். அதற்கு உதாரணம்தான் இந்தியாவின் மிகப்பெரிய தொழிலதிபர் அம்பானி. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து இந்தியாவின் தொழில் சாம்ராஜ்ய சக்கரவர்த்தியாக மட்டுமின்றி மிகப்பெரிய கோடீஸ்வரராக உருமாறியவர்.




www.gyaanaguru.com
www.gyaanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 4 - 3

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com


www.gyaanaguru.com

குஜராத் மாநிலத்தில் உள்ள சோர்வாட் என்ற கிராமத்தில் எளிமையான ஆசிரியருக்கு மகனாக பிறந்தவர் திரஜ்லால் ஹிராசந்த் அம்பானி எனப்படும் திருபாய் அம்பானி. பெரிய அளவுக்கு வசதி இல்லை என்பதால் படிக்கவில்லை. 17ம் வயதில் அரேபிய வளைகுடா நாடுகளில் ஒன்றான ஏடன் தீவுக்கு மாத வேலைக்காக சென்றார். சம்பளத்துக்கு வேலை பார்த்தாலும் அவருடைய கனவு பெரிதாக இருந்தது. அவர் வேலை செய்த பர்மா ஷெல் போன்று தானும் ஏன் ஒரு நிறுவனம் தொடங்கக்கூடாது என்று யோசித்தார். கையில் பணம் கிடையாது என்றாலும் தொழில் கற்ற துணிச்சலும் பெரிய கனவும் அவருக்கு உத்வேகம் கொடுத்தது.

அதனால் ஊருக்குத் திரும்பிய அம்பானி தெரிந்த நண்பர்களிடம் தன் கனவை சொன்னார். தொழில் ஆரம்பித்தால் கிடைக்கப்போகும் நன்மைகளையும், தொழில் வளர்ச்சியையும் பட்டியலிட்டார். அவரது திறமையான பேச்சும் திட்டமிடலும் கவர்ந்திழுக்கவே 15 ஆயிரம் ரூபாய் பணம் கிடைத்தது. அந்த பணத்தைக் கொண்டு மஜின் என்ற நிறுவனத்தை தொடங்கினார். வேலை செய்த ஏடன் நாட்டுக்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்யத் தொடங்கினார். ஏடன் நாட்டுக்கு என்ன தேவை என்பதும் இந்தியாவுக்கு என்ன தேவை என்பதும் தெரிந்திருந்தால் எளிதில் வெற்றியைத் தொட்டார்.

வணிகம் அமோகமாக வளர்ந்ததும் அம்பானி திருப்தி அடைந்துவிடவில்லை. உடனே அடுத்த கனவு கண்டார். துணி வியாபாரம் இந்தியாவில் மிகப்பெரிய அளவுக்கு வளர்ச்சி அடையும் என்று கணித்து ரிலையன்ஸ் டெக்ஸ்டைல், விமல் நிறுவனங்களை தொடங்கினார். அவருடைய கணிப்பு பொய்க்கவில்லை. நாடெங்கும் அவரது பொருட்களுக்கு வரவேற்பு அதிகரித்தது. அதிக விற்பனை, குறைந்த விலை என்ற தாரக மந்திரத்தை கையாண்டு ஏராளமான லாபம் சம்பாதித்தார்.

சாதாரண மனிதர்கள் இந்த லாபத்தோடு ஒதுங்கியிருப்பார்கள். ஆனால் திருபாய் அம்பானி மேலும் மேலும் தனது தொழிலை விரிவுபடுத்தினார். பெட்ரோல், தொலைதொடர்பு, எரிசக்தி, மின்சாரம், போக்குவரத்து என்று எந்த தொழிலையும் சின்னதாக செய்வதற்கு அம்பானிக்கு பிடிக்காது. மிகப்பெரிய கனவு, மிகப்பெரிய தொழில் என்பதுதான் அவரது லட்சியமாக இருந்தது. அதனால் தனது நிறுவனத்திற்கு சிறு முதலீட்டாளர்களை இணைக்கும் வகையில்,



பங்குகளை வெளியிட்டார். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு முதலீட்டாளர்கள் நம்பிக்கை பெற்று, பங்குசந்தையில் பெரும் ஆதிக்கம் செலுத்தினார். அதனால் 20ம் நூற்றாண்டின் இந்தியாவின் சக்திவாய்ந்த மனிதர்களில் ஒருவர் என்று ஆசியா வீக் பத்திரிகை பட்டியல் இட்டது. 50 ஆயிரம் பங்குதாரர் களின் கூட்டத்தை விளையாட்டு மைதானத்தில் நடத்தி புரட்சி செய்தார்.

வெற்றி அடைவதற்கு பின்புறக் கதவுகளை பயன்படுத்தினார் என்று அம்பானி மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் உண்டு. ஆனால் அதைப்பற்றி கொஞ்சம் கண்டுகொள்ளாமல் தன்னுடைய பயணத்தை தொடர்ந்தார். நான் தோற்றுப்போயிருந்தால் என்னை விமர்சனம் செய்யமாட்டார்கள், தொழில் மூலம் கோடிகள் சேர்த்ததால் பொறாமையால் பேசுகிறார்கள் என்று சாதாரணமாக சொல்லிவிட்டு முன்னேறினார் அம்பானி. அவரது கனவு முழுக்க முழுக்க வணிகமும் அதில் வெற்றியுமாக இருந்தது. அதனால் அந்த வெற்றியுடன் அவரிடம் பணமும் குவிந்தது.

உழைப்பு, திறமை, எதிர்கால கணிப்பு, அர்ப்பணிப்பு, லட்சியம் போன்றவையே அம்பானியை இந்தியாவின் முடிசூடா மன்னனாக மாற்றியது. அதனால் பணத்தை மட்டும் தேடினால் தொலைந்து போவீர்கள். உங்கள் திறமையைக் கொண்டு முன்னேறுங்கள், உங்கள் பின்னே நாய்க்குட்டி போன்று பணம் வந்துசேரும்.



## திருபாய் அம்பானியின் வெற்றிமொழிகள் இதோ...

- நீங்கள் கனவு காணவில்லை என்றால் யாராவது ஒருவர். அவரது கனவுக்கு உங்களை பயன்படுத்திக்கொள்வார்.
- பெரிதாக சிந்தியுங்கள், வேகமாக சிந்தியுங்கள், உடனடியாக காரியத்தில் இறங்குங்கள். ஏனென்றால் சிந்தனை உங்களுக்கு மட்டும் சொந்தமில்லை.
- முடியாது என்ற வார்த்தை ஒலிக்கும்போது நான் செவிடாக இருப்பேன்.
- வாய்ப்புகள் உங்களை சுற்றி எல்லா இடங்களிலும் இருக்கவே செய்கிறது.
- இளைஞர்கள் மீது நம்பிக்கை வைத்து ஊக்குவித்தால், ஒவ்வொருவரிடமும் இருக்கும் வரம்பற்ற ஆற்றலை பயன்படுத்திக்கொள்ள முடியும்.
- எப்போதும் மனம் தளரக்கூடாது. துணிச்சல்தான் ஊக்கம் தரும்.
- காலக்கெடுவை நோக்கி செல்லக்கூடாது, காலக்கெடுவை வெல்ல வேண்டும்.
- துணிவுடனும் கச்சிதமாகவும் ஒரு செயலை செய்துமுடிக்கும் போது நிச்சயம் வெற்றிவந்து சேரும்.

www.gyaanaguru.com

ஞானகுரு கவுன்சிலிங்

# அம்மாவை அடித்த மகன்!



வீட்டுக்கு வீடு வாசப்படி என்பது போன்று இப்போது எல்லா வீட்டிலும் டீன் ஏஜ் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான மோதலுக்கு முக்கிய காரணமாக ஸ்மார்ட் போன்களே இருக்கின்றன. எந்த நேரம் பார்த்தாலும் செல்போனும் கையுமா பிள்ளை இருப்பதாக என்று புகார் சொல்லாத பெற்றோர்களே இல்லை. ஒரு சில வீடுகளில் இது எல்லை மீறுகிறது.

அப்படித்தான் விக்கி என்ற விக்னேஷ்வரனை அவனது அம்மா மாதவி அழைத்துவந்தார். 9ம் வகுப்பு படிக்கிறான். நன்றாகப் படிக்கும் மாணவன். ஆனால், கையில் செல்போனை எடுத்தால் கீழே வைப்பதே இல்லை. நாளைந்து நண்பர்கள் இணைந்து பப்ஜி ஆட்டம் விளையாடத் தொடங்கினால், அதை முடிக்கும் வரையிலும் யார் என்ன பேசினாலும் காதில் வாங்கவே மாட்டான் என்றெல்லாம் அவனது அம்மா குறை கூறினார்.



**எஸ்.கே.முருகன்,**
மனவள ஆலோசகர்.

அதன் பின்னரே முக்கியமான விஷயத்துக்கு வந்தார். ''போன மாசம் பப்ஜி கேம் ஆடிட்டு இருந் தான். சாப்பிட்டு விளையாடுன்னு சொன்னேன். அவன் காதுல வாங்கவே இல்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து கோபத்தை அடக்க முடியாம அவன் செல்போனை பிடுங்கிட்டேன். உடனே ஆங்காரத்தில் கத்திக்கிட்டு வந்தவன் கையில இருந்த என் போனைப் புடுங்கிட்டு என்னையும் கீழே தள்ளிட்டான்.

அப்புறம் ஸாரி கேட்டான். அப்பாகிட்டே சொல்லாதம்மா, இனிமே நான் ஒழுங்கா இருக்கேன்னு சொன்னான். பத்து நாளு கொஞ்சம் அமைதியா இருந்தான். அப்புறம் திரும்பவும் அதே மாதிரி விளையாட ஆரம்பிச்சுட்டான். என்ன சொன்னாலும் முறைக்கிறான். போனை பிடுங்குனா அடிச்சிடுவானோன்னு பயமா இருக்கு,.. ஒரே பிள்ளைன்னு ரொம்பவும் செல்லம் கொடுத்துக் கெடுத்துட்டேன். இவங்க அப்பா பிரைவேட் கம்பெனியில் வேலை. காலையில போனா ராத்திரி வந்து படுக்கிறார். அவர்கிட்டே சொன்னா அடிச்சுப்புடுவார், செல்போனை புடுங்கிட்டு அப்புறம் கொடுக்கவே மாட்டார். இவனை நினைச்சு ரொம்பக் கவலையா இருக்கு.. என் ஃப்ரெண்ட் உங்களைப் பத்தி சொன்னாங்க, அதான் கூட்டி வந்திருக்கேன்'' என்றார்.

அம்மா சொல்வதை விக்கி கவனமாகக் கேட்டபடி அமர்ந்திருந்தான்.

''அம்மாவை கீழே தள்ளிவிடுற அளவுக்கு செல்போன் முக்கியமாயிடுச்சா தம்பி...''

''கேம் ஃபினிஷ் பண்ற நேரத்துல வந்து அம்மா போனை புடுங்கிட்டாங்க... அந்த கோபத்துல தள்ளிவிட்டேன். என் ஃப்ரெண்ட் மாரிஸ், பழனி எல்லாம் ராத்திரி 2 மணி வரைக்கும் விளையாடுறாங்க. அவங்க வீட்ல எல்லாம் இதை சாதாரணமா எடுத்துக்கிடுறாங்க. அம்மா தான் ரொம்பவும் சீன் போடுறாங்க...'' என்றான்.

மீசை முளைக்கும் அரும்பு பருவம். இப்போது என்ன பேசினாலும் அது மூளையில் பதியாது. பிடிவாதம்



www.gyaanaguru.com

# மந்திரச் சொல்

மனிதரோ, பொருளோ அதனை இழந்த பிறகே, உண்மையான மதிப்பு நிறைய பேருக்குத் தெரிய வருகிறது.

"சீரியஸாகவே ஹாஸ்டலில் சேர்த்துவிடுவார்கள் என்ற பயம் இப்போது தான் விக்கிக்கு வந்தது. ''சார், ஒரு நாள் விரதம் வேண்டாம், வேணும்னா ஒரு நாள் விட்டு ஒரு நாள் போன் வைச்சுக்கிறேன்'' என்றான்."

அதிகரிக்கும். கட்டுப்பாடு விதிக்கும் பெற்றோர் மீது வெறுப்பும் கோபமும் அதிகரிக்கும். அதற்காக கண்டிக்காமல், தண்டிக்காமல் விடுவது மிகப்பெரும் சிக்கலாகிவிடும்.

"விக்கி, அம்மாவின் கவலைக்கு நீயே ஒரு தீர்வு சொல் பார்க்கலாம்..." என்று பொறுப்பை அவன் தலையில் சுமத்தினேன்.

''இப்ப தினமும் 1 மணி நேரம் செல்போன் தர்றாங்க... கேம் ஆரம்பிச்சா முடிய ரெண்டு மணி நேரத்துக்குப் போகுது. என் ஃப்ரெண்ட்ஸ் யாரும் சேரலைன்னா நானே சரியா ஒரு மணி நேரத்துல குடுத்துடுறேன். மத்த பசங்க வீட்ல போய் பார்க்கச் சொல்லுங்க. முழு நேரமும் போன் குடுக்குறாங்க....."


''நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பதை முதலில் அவனிடம் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்று மாதவியிடம் கேட்டேன்.

''ஒரு மணி நேரத்துல செல்போனை குடுக்குறேன்னு அவன் சொல்றது பொய். ஒரு நாள் கூட அப்படி குடுத்ததே இல்லை. எப்படியும் ரெண்டு மணி நேரமாவது இழுத்துடுவான். புடுங்குனா கோபத்துல பிடிவாதமா இருக்கான். இதனால படிப்பு கெட்டுப் போயிடும்னு பயமா இருக்கு. கையில் செல்போன் இருக்கிறப்ப, யார் என்ன பேசினாலும் காதுல வாங்க மாட்றான், வீட்டுக்கு யார் வந்தாலும் பேசவே மாட்டான். கையில போன் இருக்கும்போது அவன் வேற மனுஷனா இருக்கான். இப்பவே இப்படின்னா, இன்னும் வளர்ந்துட்டா எப்படி மாறுவானோன்னு பயமா இருக்குது... நல்லா படிக்கலைன்னா இவனும் அவங்க அப்பா மாதிரி அவஸ்தைப்பட வேண்டியிருக்கும்..."

"அன்னைக்கு கோபத்துல தள்ளிவிட்டேன். அதையே பெருசா பேசுறாங்க..." என்று வாய்க்குள் முனங்கினான்.

"நீங்க எவ்வளவு நேரம் செல்போன் பயன்படுத்துறீங்க..?"

"நான் வேலைக்குப் போகலை சார். வீட்டுல தான் இருக்கேன். காலையிலே வேலை முடிஞ்சுடும். ராத்திரி கொஞ்சநேரம் டி.வி. பார்ப்பேன். செல்போன்ல நான் கேண்டிகிராஸ் விளையாடுவேன், பொழுதுபோகலைன்னா சொந்தக்காரங்ககிட்டே பேசிக்கிட்டு இருப்பேன்..."



''எவ்வளவு நேரம் தினமும் செல்போன் யூஸ் பண்றீங்க...''

"நாலைஞ்சு மணி நேரம் இருக்கும்..."

"பொய் சார்... எப்பப் பார்த்தாலும் செல்போன்ல யார்கிட்டேயாவது பேசிக்கிட்டுத்தான் இருப்பாங்க... இல்லைன்னா கேண்டிகிரஸ் விளையாடுவாங்க, வாட்ஸ் ஆப், இன்ஸ்டாகிராம் பாப்பாங்க"

''உங்க அப்பா எவ்வளவு நேரம் போன் பார்ப்பார்...''

"அவர் வேலையை விட்டு வர்றதுக்கு ராத்திரி 9 மணி ஆயிடும். அதுக்குப் பிறகு டி.வி. பார்ப்பார். கொஞ்சநேரம் போன் பார்த்துட்டுத் தூங்கிடுவார்..."

அம்மா அதிக நேரம் செல்போன் பயன்படுத்துவதால் மகனும் தைரியமாகப் பயன்படுத்துகிறார். இப்போதைக்கு பப்ஜி விளையாடும் விக்கி அடுத்தடுத்து வேறு தவறான விஷயங்களுக்குள் நுழைவதற்குள் மீட்க வேண்டும். அதைவிட செல்போன் இல்லாமல் இருக்க முடியும் என்பதை உணரச் செய்வதே முக்கியம் என்பது புரிந்தது.

"உங்களுக்கு விரதம் இருப்பதில் நம்பிக்கை இருக்கிறதா..?"

"சஷ்டி விரதம் இருப்பேன்" என்றார்.

"அது போல் நீங்கள் இருவரும் செல்போன் விரதம் கடைபிடிக்க வேண்டும்..." என்றேன்.

''அதென்ன செல்போன் விரதம்..?'' என்று இருவரும் கேட்டார்கள்.

''விக்கிக்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் செல்போன் பயன்பாடு. எத்தனை மணி நேரம் என்றாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். மற்ற நாட்களில் செல்போன் தொடவே கூடாது. நீங்கள் விக்கி பள்ளியில் இருந்து வந்தபிறகு உங்கள் செல்போனை பயன்படுத்தக் கூடாது. போன் வந்தால் மட்டும் சுருக்கமாகப் பேச வேண்டும்......" என்றேன்.

"வாரத்தில் ஒரு நாளா... அதெல்லாம் முடியாது சார்..." என்று விக்கி சட்டென கோபமானான்.

அவன் கோபத்தைப் பார்த்த மாதவி, ''நான் இருக்கிறேன் சார்......" என்றார்.

''அம்மா இருந்தா இருக்கட்டும், நான் இருக்க மாட்டேன்" என்றான்.

"சரி, உங்கள் சொல் கேளாத பிள்ளையை வீட்டில் வைத்துக்கொள்ள அவசியம் இல்லை. விக்னேஷ்வரனை ஹாஸ்டலில் சேர்த்துவிடுங்கள். அவன் செல்போனை தொட முடியாமல் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.."

"எங்க ஸ்கூல்ல ஹாஸ்டல் எல்லாம் கிடையாது" என்றான் ஜாலியாக.

"சென்னையில் விக்னேஷ்வரன் படிக்க வேண்டாம். நாமக்கல் அல்லது சேலத்தில் சேர்த்துவிடுங்கள். காலை 5 மணிக்கு எழுப்பி படிக்க வைத்து இரவு 10 மணிக்கு தூங்கச் சொல்வார்கள். மூன்று வருடங்களில் உங்கள் பையன் நிறைய மதிப்பெண் வாங்கியும் விடுவான், ஒழுக்கமாகவும் வளர்க்கப்படுவான்.."

விக்னேஷ்வரன் பயப்படுவான் என்று நினைத்தால், அவனது அம்மா தான் பயந்தார்.

"ஒத்தப் பிள்ளை, அவனை அங்கே அனுப்பிட்டு இங்க நான் என்ன செய்றது?"

"உங்கள் மகன் நல்லவனாக வளரவேண்டும் என்று நினைத்தால் இந்த கண்டிப்பு அவசியம். வீட்டில் உங்களால் அவனை ஒரு அளவுக்கு மீறி கண்டிக்க முடியாது. அதனால், அடுத்த வாரம் உங்கள் கணவரை அழைத்து வாருங்கள். நான் பேசிப் புரிய வைக்கிறேன். இந்த முரட்டுத்தனத்தை இப்போது கட்டுப்படுத்தவில்லை என்றால் பின்னர் சிக்கலாகிவிடும்..." என்று மிகவும் கண்டிப்புடன் சொன்னேன்.

சீரியஸாகவே ஹாஸ்டலில் சேர்த்துவிடுவார்கள் என்ற பயம் இப்போது தான் விக்கிக்கு வந்தது. "சார், ஒரு நாள் விரதம் வேண்டாம், வேணும்னா ஒரு நாள் விட்டு ஒரு நாள் போன் வைச்சுக்கிறேன்" என்றான்.

"அது சரிப்படாது விக்கி. ஒரு நாள் என்றால் ஒரு நாள் மட்டும் தான்..." என்றேன் உறுதியாக.



www.gyaanaguru.com

கைகளைப் பிசைந்துகொண்டவன், ''சரி, ரெண்டு நாளாவது குடுக்கச் சொல்லுங்க'' என்றான்.

இரண்டு நாள் என்று முதலில் சொல்லியிருந்தால் இப்போது நான்கு நாட்களாக மாறியிருக்கும். இரண்டு நாட்கள் என்பது ஓரளவு ஏற்கத்தக்கது. அதோடு செல்போன் பயன்படுத்தாத நாட்களில் தான் எதையும் இழக்கவில்லை என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியும் என்பதால் சம்மதம் சொன்னேன்.

''எந்த இரண்டு நாட்கள் செல்போன் வேண்டும் என்பதை அந்தந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை முடிவு செய்யுங்கள்...'' என்று சொல்லிவிட்டு விக்னேஷ்வரனை வெளியே அனுப்பிவிட்டு மாதவியிடம் பேசினேன்.

“குழந்தைகள் இப்போது மிகவும் சுதந்திரமாக வளர்கிறார்கள். அதேநேரம், உங்களைப் பார்த்தே வளர்கிறார்கள். நீங்கள் கத்தினால் அவர்களும் கத்துவார்கள். நீங்கள் அடித்தால் அவர்களும் அடிப்பார்கள். விக்கியைப் பார்த்தால் பயமாக இருக்கிறது என்று அவன் முன்பு ஒருபோதும் சொல்லாதீர்கள். உங்களைக் கண்டு அவனே அஞ்ச வேண்டும். நீங்கள் அவனுக்குப் பயப்படுவது தெரிந்துவிட்டால், இன்னும் அதிகமாக கோபப்படுவான். முரட்டுத்தனமாக மாறியே விடுவான்.

அவனுக்காக நீங்களும் செல்போனை தியாகம் செய்ய வேண்டும். அவன் பள்ளியில் இருந்து வருவதற்குள் பேசுவதை எல்லாம் பேசிவிடுங்கள். அவன் இருக்கும் நேரத்தில் யார் போன் செய்தாலும், ‘என் பையன் படிக்கிறான், காலையில் பேசுங்கள்’ என்று அவன் முன்னே பேசுங்கள்.

அடம்பிடித்தால் ஒருபோதும் கண்டுகொள்ளவே வேண்டாம். சாப்பாடு கிடையாது என்று உறுதியுடன் சொல்லுங்கள். கோபத்தை சாப்பாடு மீது காட்டாதே என்று கெஞ்சவே செய்யாதீர்கள். உண்மையாகவே ஒரு முறை சேலம் அல்லது நாமக்கல் போய் ஒரு பள்ளியில் விசாரித்துவிட்டு வாருங்கள். அப்போது தான் ஹாஸ்டலில் சேர்த்துவிடுவார்கள் என்ற பயம் அவனுக்கு எப்போதும் இருக்கும்.

அவனுடைய செல்போன் விரதத்தை அவன் நண்பர்களிடமும், உங்கள் சொந்தக்காரர்களிடமும் பெருமையுடன் சொல்லி வையுங்கள். மத்த நாளில் அவன் செல்போன் கேட்கவே மாட்டான் என்று அவனை பாராட்டுங்கள். இந்த பாராட்டு மட்டுமே அவனுக்கு மருந்து. அவனுடைய நன்மைக்காகவே இதனை செய்கிறோம் என்றும் சொல்லுங்கள். கல்லூரியில் சேர்ந்த பிறகு உன்னுடைய கையில் செல்போன் கொடுத்து விடுவோம் என்றும் நம்பிக்கை கொடுங்கள்.



## அம்மாவை அடித்த மகன்

இந்த விரதத்தை ஒருபோதும் உடைக்காதீர்கள். பரீட்சை காரணமாக செல்போன் எடுக்கவில்லை என்றால், அந்த நாளை அடுத்த வாரத்துக்குச் சேர்த்துக் கொடுக்காதீர்கள். மது போதையில் இருக்கும் அத்தனை ஆபத்துகளும் செல்போனிலும் இருக்கிறது. ஆரம்ப கட்டத்தில் வந்திருப்பதால் அவனை நிச்சயம் மீட்டுவிட முடியும். இந்த செல்போன் போதையிலிருந்து அவனை மீட்பதற்கு நீங்கள் முழு மனதுடன் துணையாக இருக்க வேண்டும்'' என்று சொல்லி அனுப்பினேன்

அடுத்த மாதம் மாதவி மட்டும் வந்தார். ''அவ்வப்போது கெஞ்சுவான். ஆனாலும் நான் செல்போன் தருவதே இல்லை. முதல் ஒரு வாரம் ரொம்பவும் அப்செட்டாக இருந்தான். அவன் நண்பர்களிடம் விரதத்தை சொல்லிவிட்டதால், அவர்கள் அந்த ரெண்டு நாளில் மட்டும் அவனை விளையாடக் கூப்பிடுகிறார்கள். மற்ற நாட்களில் சிரித்துப் பேசுகிறான்...'' என்று சந்தோஷமாகச் சொன்னார்.

“என்ன காரணம் என்றாலும் நாமக்கல் பள்ளி என்ற அஸ்திரத்தையும் செல்போன் விரதத்தையும் உடைத்துவிடாதீர்கள்...''' என்று சொல்லி அனுப்பினேன். அதன் பிறகு மாதவி வரவேயில்லை.

www.gyaanaguru.com






www.gyaanaguru.com

# ஞானகுரு பதில்கள்

**? இனி தப்பிக்கவே முடியாது எனும் அளவுக்கு மோசமான நோயில் சிக்கியிருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்..?**

**- எஸ்.சரஸ்வதி, சேலம்.**

**ஞானகுரு ;**

எல்லாம் முடிந்துவிட்டது போன்ற நிலை எந்த ஒரு மனிதருக்கும் வரலாம். இந்த நேரத்தில் இரண்டு வழிகள் இருக்கின்றன. முதலாவது, மிகவும் மோசமாக சிக்கிவிட்டேன், இனி தப்பிக்கவே முடியாது என்ற மனநிலையில் மேலும் மேலும் வருத்தப்பட்டுக்கொண்டே வாழ்க்கையை நடத்துவது. இரண்டாவது வழி, இந்த நிலையில் இருந்து தப்பிக்க ஏதேனும் வழி இருக்கலாம் என்று தேடுவது. இந்த இரண்டாவது வழி, இருள் நிறைந்த காட்டுக்குள் ஒரே ஒரு விளக்கு மட்டும் வைத்துக்கொண்டு தப்பிக்க முயற்சிக்கும் நம்பிக்கை வழி. இந்த பயணத்தில் வழி கிடைக்கும் என்பது உறுதியில்லை என்றாலும் கடைசி வரையிலும் தேடிக்கொண்டு இருக்கலாம். கிடைத்தால் நல்லது, கிடைக்காவிட்டாலும் நல்லது. ஏனென்றால் இருளை விரட்ட இருள் உதவாது. நம்பிக்கை ஒளியால் மட்டுமே இருட்டை விரட்ட முடியும்.



**? பொருளாதாரச் சிக்கலில் மாட்டி துன்பப்படுகிறேன், மீள்வது எப்படி..?**

**- பி.கணேசமூர்த்தி, முத்தால்நகர்.**

**ஞானகுரு :**

பொருளாதாரச் சிக்கல் இல்லாத மனிதர்கள் யாரும் இல்லை. அவரவர் தகுதிக்கு ஏற்ப பொருளாதாரச் சிக்கலை உருவாக்கிக்கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள். மாத சம்பளத்துக்காரர் இ.எம்.ஐ. கட்டிவிட்டு மீதி நாட்களை ஓட்டுவதற்கு அல்லாடுகிறார். வியாபாரத்தை விஸ்தீரணம் செய்துவிட்டு வங்கி லோனுக்கு தொழிலதிபர்கள் அலைகிறார்கள். அம்பானி, அதானி என்றாலும் பொருளாதாரச் சிக்கல் இருக்கவே செய்யும். இந்த சிக்கலைத் தாண்டி விடலாம் என்று நினைத்தால் தைரியமாகப் போராடுங்கள். முடியாதது எதுவும் இல்லை.

**? தகுதி உள்ளவை தப்பிப் பிழைக்கும் எனும் தியரி மனித உயிர்களுக்கும் பொருந்துமா..?**

**- பி.விநாயகசுந்தரம், படந்தால் சாலை.**

**ஞானகுரு :**

மனிதருக்குள் நடக்கும் போட்டியில் வேண்டுமானால் இந்த தியரி சரியாக இருக்கலாம். இயற்கையுடன் நடக்கும் போட்டியில் மனிதருக்கு இது பொருந்தாது. பூகம்பம், சூறாவளி போன்றவற்றுக்கு முன் எத்தகைய திறமைசாலியும் தாக்குப்பிடிக்க முடியாது. முழுமையான பயிற்சி பெற்றவர்கள் போரில் கொல்லப்படுவதும், அரைகுறை வீரர்கள் தப்பிப்பதும் சகஜம். இயற்கைக்கு எந்த விதிகளும் கிடையாது.

**? என்னிடம் குறைவாகவே இருக்கிறது. இந்த நிலையில் இருப்பதை வைத்துக்கொண்டு நிம்மதியாக வாழ முடியுமா..?**

**- பி.சாம்ராஜ், மேகமலை.**

**ஞானகுரு :**

குறைவு, அதிகம் என்பதெல்லாம் அவரவர் மனநிலையில் இருக்கிறது. உங்களால் விரும்பியதை சாப்பிட முடியாமல் இருக்கலாம். ஆனால், ஒரு நேரம் கூட சாப்பாடு கிடைக்காத மனிதர்கள் இருக்கிறார்கள். உங்கள் வீடு மிகவும் சிறியதாக இருக்கலாம். ஆனால், வீடு இல்லாமல் ரோட்டில் வாழும் மனிதர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். உங்களுக்கு நோய் துன்பம் தரலாம். ஆனால், சிகிச்சை செய்துகொள்ளவே முடியாத நிலையில் நிறைய மனிதர்கள் வாழ்கிறார்கள். நீங்கள் செய்யும் வேலை மோசமாக இருக்கலாம். ஆனால், அந்த வேலை கூட இல்லாமல் நிறைய மனிதர்கள் இருக்கிறார்கள். உங்களிடம் குறைவான சேமிப்பு இருக்கலாம். ஆனால், கழுத்து வரை கடனுடன் நிறைய பேர் இருக்கிறார்கள். இப்படி பார்க்கத் தொடங்கினால் உங்களிடம் நிறைய நிறைய இருப்பதை காணலாம்.







**? எனது மேலதிகாரி எதற்கெடுத்தாலும் என் மீது கோபப்படுகிறார்... அவருடைய குணத்தை மாற்ற முடியுமா..?**

**- சி.அயோத்திதாசன், சென்னை.**

**ஞானகுரு :**

ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவருடைய மோசமான ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்கிறோம் என்று அர்த்தம். கெட்டவர் என்றும் நல்லவர் என்று



யாரும் கிடையாது. எல்லோரிடமும் எல்லாமும் கலந்தே இருக்கும். உங்கள் மீது கோபப்படும் அதே நபர், அவரது குடும்பத்தினர், நண்பர்களிடம் சிரித்துப் பேசும் சந்தோஷமான நபராக இருக்கக்கூடும்.

யாருடைய குணத்தையும் யாராலும் மாற்ற முடியாது. ஆனால், மோசமான மனிதரையும் உங்களிடம் நல்லவராக நடந்துகொள்ளும்படி மாற்றிவிட முடியும். புலி மோசமான விலங்கு என்றாலும் அதை பழக்கப்படுத்தி வளையத்தில் தாவச்செய்ய முடியும். வளையத்தில் தாவினாலும் புலியின் குணம் மாறிவிடாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உங்கள் மேலதிகாரி உங்களை பாராட்ட வேண்டும் என்றால், நீங்கள் முதலில் அவரது பாசிடிவ் பக்கங்களைப் பார்க்க வேண்டும். அவரது ஆளுமைத் திறன், அவரது பேச்சாற்றல், வேலை நுணுக்கம் போன்ற உண்மையான திறமைகளைப் பாராட்டுங்கள். எத்தனை கஷ்டப்பட்டு இந்த நிலைக்கு வந்திருப்பார் என்பதை அறிந்துகொண்டு நெருக்கம் காட்டுங்கள். அவரது பாசிடிவ் பக்கங்களை நீங்கள் பார்க்கத் தொடங்கிவிட்டால், அவரும் உங்களுடைய பாசிடிவ் பக்கத்தைப் பார்க்கத் தொடங்குவார். இது ஒரு ஆரம்பமாக இருக்கட்டும். புலியை பழக்க முடியும் எனும்போது அதிகாரியை மாற்ற முடியாதா..?

**? உயிருடன் இருப்பதை கண்ணுக்கு முன்பாகப் பார்க்கிறோம். செத்து விட்டார்கள் என்றால் உயிர் எங்கே போகிறது..?**

**- ஸ்ரீராம், நாகப்பட்டினம்.**

**ஞானகுரு :**

தத்துவார்த்தமாகச் சொல்வது என்றால் புத்தர் கூறிய பதில் சரியாக இருக்கும். ஒரு விளக்கு அணைந்துவிட்டால் அந்த ஒளி மறைந்துபோகிறது. இதுவே மரணம். அந்த ஒளி எங்கு செல்கிறது..? எரியும் விளக்கில் இருந்து ஆயிரம் விளக்கிற்கு ஒளி கொடுக்க முடியும். அதுவே ஜனனம். ஒளி எங்கே இருந்து வரவும் இல்லை, எங்கேயும் மறையவும் இல்லை. எல்லாம் இயற்கையில் இருக்கிறது. இதை அறிவியல்ரீதியாகச் சொல்வது என்றால் உயிர் என்பது இயக்க ஆற்றல். பேட்டரியில் இருக்கும் மின் ஆற்றல் தீர்ந்துபோனதும் செயல் இழப்பது போன்று உடலில் இருக்கும் ஆற்றல் தீர்ந்துபோனதும் உயிர் போய்விடுகிறது. இதற்கு மேலான சிந்தனை மனிதருக்குத் தேவையே இல்லை.





**? ஒரு மனிதனுக்குள் எத்தனை முகம் இருக்கிறது.. எப்போது வெளிப்படும்?**

**- டி.சுந்தர், வ.உ.சி.நகர்.**

**ஞானகுரு :**

அப்பா, கணவன், பிள்ளை, அண்ணன், தம்பி, மேலாளர், வேலைக்காரர், கோபக்காரர், அன்பானவர், கொடுமைக்காரர் என்று எல்லாவிதமான முகமுமும் மனிதருக்கு இருக்கிறது. தேவைப்படும் இடங்களில் தேவைக்கேற்ப எல்லோரும் அணிந்துகொள்கிறார்கள். இத்தனை முகங்களில் எது உண்மை முகம் என்பது சம்பந்தப்பட்ட நபருக்கே சில நேரங்களில் தெரிவதில்லை.



? பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் செய்யும் மோசமான தவறு என்ன..?

**- எம்.ஷோபா, வாணியம்பாடி.**

**ஞானகுரு :**

டீன் வயதில் ஆண் பிள்ளைக்கு ரேஸ் பைக் வாங்கித்தருவதும் பெண் பிள்ளைக்கு பியூட்டி பார்லரை அறிமுகம் செய்வதும் ஆபத்தான செயல். மாணவப் பருவத்தினருக்கு மனதில் இருக்கும் உறுதி உடலுக்கு இருக்காது. இந்த வயதினரால் ரேஸ் பைக்கை நகரங்களில் சமாளித்து ஓட்ட முடியாது. தினம் ஒரு மாணவனாவது இந்த பைக்கினால் விழுந்து உயிரை இழக்கிறான் என்றும் தெரிந்தும் நிறைய பெற்றோர்கள் வாங்கித் தருகிறார்கள். இந்த பெற்றோர்கள் தங்கள் பிள்ளை உயிருக்கு மட்டுமின்றி சாலையில் செல்லும் நபர்களின் உயிருக்கும் எமனாக மாறுகிறார்கள்.

பெண் பிள்ளைகளுக்கு இயற்கையே அழகு என்று சொல்லி வளர்க்காமல் செயற்கை அழகிற்கு அடிமையாக்குகிறார்கள். தலைமுடி, புருவம், இமைகள், உதடுகள் எல்லாமே செயற்கையாக மாறுகிறது. பியூட்டி பொருட்கள் இல்லையென்றால் தான் அழகி இல்லை எனும் அளவுக்கு அவள் நம்பிக்கை இழந்துவிடுகிறாள். அழகு என்பது பார்ப்பவர் கண்களில் மட்டுமே உள்ளது என்பதை சொல்லி வளர்ப்பது போதும்.

? அரசியலில் இணைய விரும்புகிறேன், அதற்கான தகுதிகளைக் கூறுங்களேன்..?

**- ஐ.முத்தையா, சாத்தூர்.**

**ஞானகுரு :**

காமராஜர் போன்று தங்களுடைய நேரத்தைப் பிறருக்காக செலவிடத் தயாராக இருப்பவர்களே அரசியலுக்குத் தகுதியானவர்கள். குடும்பத்தை விட்டு எத்தனை தூரம் விலகிச் செல்கிறீர்களோ, அத்தனை எளிதில் அரசியல் வெற்றி கிடைக்கும். ஆனால், இந்த தத்துவத்தை கருணாநிதி மாற்றிவிட்டார். குடும்பத்தை விட்டு விலகிச் செல்வதற்கு மனமின்றி குடும்பத்தையும் அரசியலுக்குள் கொண்டுவந்து விட்டார். கருணாநிதி வழியில் ஸ்டாலின், ராமதாஸ், தமிழிசை, பிரேமலதா, ஜி. கே.வாசன் என்று எல்லோருமே கலக்குகிறார்கள். நேரம் இருக்கும் என்றால் மட்டும் இறங்குங்கள்.

? பணம் பத்தும் செய்யும் என்கிறார்களே, அது என்ன..?

**- கே.ராகவன், சூலக்கரை.**

**ஞானகுரு :**

காம, குரோத, லோப, மோஹ, மத, மாச்சர்ய, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை ஆகிய பத்தும் செய்யும் என்பார்கள். அதாவது பேராசை, தீய இச்சை, கஞ்சத்தனம், காதல், அகம்பாவம் எனப்படும் ஈகோ, பொறாமை, ஆடம்பரம், தனக்கு நிகர் எவரும் இல்லை என்ற அகங்காரம், கர்வம், கெடுமனம் அதாவது தனக்கு நேர்ந்த துன்பம் பிறருக்கும் ஏற்பட வேண்டும் என்ற கொடிய புத்தி போன்ற பத்து தீய குணங்களும் வந்து சேர்ந்து விடும் என்கிறார்கள். உண்மை என்னவென்றால் பணம் எதுவும் செய்யாது. பணம் என்பது கத்தி போன்றது. ஆபரேஷனும் செய்யலாம், கொலையும் செய்யலாம். பணத்திற்காக தவறு செய்பவர்களை விட, பணம் இருப்பதால் தவறு செய்பவர்களே அதிகம்.

? நான் காதலித்த பெண் என்னை நிராகரித்து விலகிவிட்டாள். இந்த தோல்விக்குப் பிறகும் நான் வாழ வேண்டுமா?

**- எல்.மணிமாறன், பொள்ளாச்சி.**

**ஞானகுரு :**

சதுரங்க விளையாட்டில் ராணி வெட்டப்பட்டதும் ஆட்டம் முடிவதில்லை. ஒரு சாதாரண சிப்பாயை மேலே வரை கொண்டுபோய் வேறு ஒரு ராணியைக் கொண்டுவர முடியும். இதுவே வாழ்க்கை. ஒரு பெண் விலகியதால் உங்கள் வாழ்க்கை முடியவேண்டிய அவசியம் இல்லை. வேறு ஒரு ராணியை கொண்டுவந்து விளையாடுங்கள். அதேநேரம், உங்களை நீங்கள் அலசி ஆராய்ந்து பாருங்கள். உங்களை விரும்பிய பெண் விலகிச்செல்கிறார் என்றால் கண்டிப்பாக உங்கள் பக்கம் தவறுகள் இருக்கும். அவற்றைக் கண்டுபிடியுங்கள். உங்கள் தகுதிகளை வளர்த்துக்கொண்டு ஒரு ராஜாவை போலவே முன்னேறுங்கள். அடுத்து வரும் பெண் விலகிச்செல்லாத வகையில் சிறப்பாக வாழ்ந்து காட்டுங்கள். இதுவே, உங்கள் முதல் காதலிக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய காதல் பரிசு.




www.gyaanaguru.com



? மனநிலை சரியில்லாத நேரத்தில் என்ன செய்ய வேண்டும்..?

**- டி.முனீஸ்வரன், இந்திராநகர்.**

**ஞானகுரு :**

மனசு சரியில்லை என்பதை ஒப்புக்கொள்வது தான், அதிலிருந்து மீள்வதற்கு மிகச்சரியான வழி. பதட்டம், அழுத்தம் மனதில் ஏற்பட்டதும், என்ன செயல் செய்து கொண்டு இருக்கிறீர்களோ, அதிலிருந்து கொஞ்ச நேரம் வெளியே வாருங்கள். மனதுக்குப் பிடித்த நண்பர்கள், உறவினர்கள் என யாரிடமாவது மனம் விட்டுப் பேசுங்கள். யாருடைய ஆலோசனையும் அவசியமில்லை. மனதில் இருப்பதை பகிர்ந்துகொள்வது மட்டும் போதும். பிறரிடம் பேசுவதற்கு விருப்பம் இல்லை யென்றால் ஒரு பேப்பர் அல்லது செல்போனில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னை குறித்து முழுமையாக எழுதுங்கள், அதற்கு என்ன வெல்லாம் தீர்வு இருக்கிறது என்பதையும் எழுதுங்கள். இப்படி முழுமையாக எழுதும்போதே பாதி பிரச்னை தீர்ந்துவிடும். இசை அல்லது நகைச்சுவை என மனதுக்குப் பிடித்ததில் கொஞ்ச நேரம் செலவழியுங்கள். மனசு சரியில்லைன்னா ஒரு கட்டிங் போடலாம் என்று அழைக்கும் நண்பர்களுடன் சென்றுவிடாதீர்கள். அது, இப்போது இருப்பதை விட பெரிய சிக்கலுக்குக் கொண்டுபோய் நிறுத்திவிடும்.



? புகழ் வெளிச்சம் மனிதனை வளப்படுத்துமா..?

**- என்.நாகேந்திரன், குறிஞ்சி தெரு.**

**ஞானகுரு :**

குற்றம் செய்த மனிதர்களைத் திருத்துவதற்காகவே சிறைச்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால், சிறைக்குச் சென்று திருந்தியவர்களை விட கெட்டுப் போனவர்களே அதிகம். அப்படி, புகழை தங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்துபவர்கள் குறைவு. மேலும் மேலும் புகழுக்கு ஆசைப்பட்டு ஓடுகிறார்களே தவிர, அந்த வெளிச்சத்தை ரசித்து அனுபவிப்பதில்லை.

? எந்த போதை மனிதனை அழிக்கும், எது உயிர்ப்பிக்கும்..?

**- ஏ.குமார், அல்லம்பட்டி.**

**ஞானகுரு :**

இந்த மண் யாருக்கும் ஒரு போதும் சொந்தமாக இருந்ததே இல்லை. ஆனாலும், மண் மீதான போதையினாலே இந்த உலகில் லட்சக்கணக்கான போர்கள் நடைபெற்று கோடிக்கணக்கான மனிதர்கள் மடிந்திருக்கிறார்கள். பிறர் உதவியின்றி ஆரோக்கிய மாக வாழும் வகையில் உடம்பைப் பழக்குவதே உயிர் போதை. இந்த போதையே உயிர்ப்பிக்கும் சக்தி.



# ஞானகுரு பதில்கள்



? தமிழக குடும்ப அமைப்பை வெளிநாட்டினர் கொண்டாடக் காரணம் என்ன..?

**- என்.பூமிநாதன், காந்திநகர்.**

**ஞானகுரு :**

வெளிநாட்டினர் நமது குடும்ப அமைப்பை ஆச்சர்ய மாகப் பார்க்கிறார்கள் என்பது மட்டுமே உண்மையே தவிர, கொண்டாடுவதில்லை. அப்படி கொண்டாடுவது என்றால், அங்கேயும் நமது கலாச்சாரத்தைப் பின்பற்றி யிருப்பார்கள். இந்தியர்களே இப்போது வெளிநாட்டு குடும்ப அமைப்பை கடைபிடிக்கத் தொடங்கியிருக்கிறார் கள். இதிலிருந்தே எது உயர்வானது என்பதை அறியலாம்.

www.gyaanaguru.com




## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

# ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

**தொகை அனுப்ப வேண்டிய முகவரி:**
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் -
9840903586, 7299753999

# அம்மாக்களா...?

## விவாகரத்துக்குக் காரணம்

'நான் வளர்த்த மாதிரி யாருமே பிள்ளையை வளர்த்திருக்க மாட்டாங்க... என் பிள்ளைக்கு எது பிடிக்கும்னு எனக்குத் தான் தெரியும், அவனுக்கு எதுவுமே சொல்லித்தராம வளர்த்துட்டேன்' என்றெல்லாம் டயலாக் பேசாத அம்மாக்களே கிடையாது. அந்த அம்மாக்கள் தான் இன்று விவாகரத்து பெருகுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறார்கள்.

திருமணத்துக்குப் பிறகும் பிள்ளை மீது அக்கறை செலுத்துவதும் கவனித்துக்கொள்வதும் பாசம் என்று நம்புகிறார்கள். உண்மை என்னவென்றால் ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாழ்க்கையைத் தானே அமைத்துக்கொள்ளவே ஆசைப்படுகிறார்கள். சின்னப் பிள்ளையாக இருக்கும்போது அம்மாவின் பின் சுற்றிக்கொண்டு இருந்தது போலவே வளர்ந்த பிறகும், திருமணத்திற்குப் பிறகும் சுற்றிவர விரும்புவதில்லை. அதனாலே திருமணம் முடிந்ததும் கொஞ்சம் விலகிப் போகிறார்கள்.

ஆனால், 'என் பிள்ளையை பேசவே விடமாட்டேங்கிறா, பிரிக்கிறா... என்ன சொல்லித்தர்றாளோ தெரியலை, என்கிட்டே முகங்கொடுத்தே சரியா பேசுறதில்லை. அவ, என்னத்தை வைச்சாலும் அமைதியா சாப்பிட்டுப் போறான், எனக்கு இதையெல்லாம் பார்க்க சங்கடமா இருக்கு' என்று எல்லா குற்றத்தையும் மருமகள் மீது திணிக்கிறார்கள். இதில் சண்டை வரும் நேரத்தில் தன் பக்கம் நின்று பிள்ளை பேசவேண்டும் என்று உரிமை கொண்டாடுகிறார்கள்.



அன்பு விலங்கு

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

மகனைப் பெற்ற அம்மாக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான உண்மைகள் இருக்கின்றன.

- திருமணம் முடிந்துவிட்டதால் அம்மா மீது பிள்ளைக்குப் பாசம் குறைந்துவிடாது. அம்மா மீது பாசமாக இருப்பது போலவே மனைவி மீதும் பாசமாக இருக்க முடியும். ஒருவரால் எத்தனை நபர் மீதும் மாறாத பாசத்துடன் இருக்க முடியும் என்பதை நம்புங்கள். தன் மகனுடைய அன்பை பங்கு போட ஒரு பெண் வந்துவிட்டார் என்ற பொறாமை குணம் இருப்பவர் மட்டுமே, முன்பு போல் என்னிடம் மகன் பேசுவதில்லை என்று புலம்புகிறார்கள்.

- புதிய மனைவியை கவனிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு என்பதால் அவருக்கு மனைவியே முன்னுரிமை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பெற்றவர், வளர்த்தவர் என்றாலும் திருமணத்திற்குப் பிறகு நீங்களே தள்ளி நிற்பது நல்லது. அப்படி நிற்கவில்லை என்றால் பிள்ளையே தள்ளி நிறுத்திவிடுவார்.

- ஆண் திருமணத்திற்கு முன்பாகவும் பெற்றோர்களிடம் மிகவும் நெருங்கிப் பேசுவது, பழகுவது இருக்காது. ஆனால், திருமணத்திற்குப் பிறகு தான் அப்படி மாறிவிட்டான் என்று அம்மாக்களே நினைத்துக்கொள்கிறார்கள். இதுவே, நிறைய பிரச்னைக்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது.

- தன்னை மதிப்பது போலவே தன் மனைவியையும் அம்மா மதிக்க வேண்டும் என்றுதான் ஆண் நினைக்கிறான். பிள்ளையைப் பெற்றவள் என்பதால் தன்னை மருமகள் மதிக்க வேண்டும் என்று அம்மாக்கள் நினைக்கிறார்கள். இந்த வித்தியாசத்தை அம்மாக்களே புரிந்துகொள்ள வேண்டும்.

- முன்பு போலவே அலுவலகம், நட்பு, பணம் தொடர்பான எல்லா விஷயங்களையும் தன்னிடம் மகன் பேசவேண்டும் என்று அம்மாக்கள் நினைக்கிறார்கள். மனைவியிடம் பேசிவிட்டாலே போதும் என்பது தான் ஆணின் எண்ணம். இதை திட்டமிட்டு மறைப்பதாக நினைத்து அம்மாக்கள் வருந்துகிறார்கள்.

- திருமணத்திற்கு முன்பு சம்பாதிக்கும் பணத்தை மகன் என்ன செய்கிறான் என்பது அம்மாவுக்குத் தெரிந்திருக்கலாம். திருமணத்திற்குப் பிறகு இந்த விஷயம் மனைவிக்கு மட்டும் தெரிந்தால் போதும் என்பதே பிள்ளைகளின் விருப்பமாக இருக்கிறது. அம்மா, அப்பாவையும் பணம் விஷயத்தில் தள்ளியே வைப்பார்கள். ஆகவே, இதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியது அம்மா தான்.



- அம்மா, அப்பாவுக்கு சாப்பாட்டுக்கும் மருந்துக்கும் பணம் கொடுத்தால் போதும் என்பது மட்டுமே மகனின் எண்ணமாக இருக்கும். அம்மாக்களின் ஆசையை நிறைவேற்றுவதற்கு பிள்ளைகள் விரும்ப மாட்டார்கள். மனைவி, பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றுவது மட்டுமே தன்னுடைய கடமை என்பது மகனுக்குத் தெரியும். இதையும் அம்மாக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

- பிறரிடம் மனைவியை அறிமுகம் செய்வதற்கே மகன் விரும்புவார். வெளியிடங்களிலும் மனைவிக்கே முக்கியத்துவம் கொடுப்பார். இது தான் சரியான அணுகுமுறை என்பதை அம்மாவே புரிந்துகொள்ள வேண்டும். அம்மாவை மறந்துட்டான் என்று அழுது புலம்புவதில் அர்த்தமே இல்லை.

திருமணமான வீடுகளில் அம்மாக்களால் பிரச்னை வருவது போன்று அப்பாக்களால் அத்தனை பிரச்னைகள் வருவதில்லை. ஏனென்றால், ஆண்கள் உணவு தவிர வேறு எந்த விஷயத்துக்கும் அத்தனை முக்கியத்துவம் தருவதில்லை. பிள்ளையின் வாழ்க்கையில் நுழைந்து பார்க்கவும் விரும்புவதில்லை. எனவே, அம்மாக்கள் எல்லோரும் அப்பாக்களாக மாறினால் மட்டுமே மகனுடைய திருமண வாழ்க்கை சுகமாகக் கழியும்.

மருமகளைப் பற்றி அம்மாக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகளும் இருக்கின்றன. இதனை மறப்பதே சண்டைக்கும் பிரச்னைக்கும் காரணமாகிறது.

- மகன் மீது தன்னை விட மருமகளுக்கே அதிக உரிமை உள்ளது என்பதை அம்மாக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

- மருமகள் மீது தனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி பேச வேண்டும் என்பதை சொல்லிக்கொடுப்பதற்கு அவசியம் இல்லை.

- தங்கள் வீட்டு உணவு, தங்கள் குடும்ப பழக்கம் போன்றவைகளை மருமகள் மீது திணிக்கக்கூடாது.

- மகன் மற்றும் மருமகள் சம்பளத்தில் அவர்களுக்கே முழு உரிமையும் உண்டு. அதை கணக்குக் கேட்பதை யாரும் விரும்ப மாட்டார்கள்.

- பேரக் குழந்தைகள் மீதும் மருமகளுக்கே முழு உரிமை உள்ளது. எனவே, பிள்ளையை அவர் இஷ்டப்படி வளர்ப்பதைக் கேள்வி கேட்கக் கூடாது.

- எங்க மாமியார் என்று பழைய கதைகளைப் பேசாதீர்கள். காலம் மாறிவிட்டது. நீங்கள் உங்கள் மாமியாருக்கு அடிமையாக இருந்தது போன்று இன்றைய பெண்கள் இருக்க மாட்டார்கள், இருக்கவும் கூடாது.

எனவே, திருமணம் முடிந்ததும் தனிக்குடித்தனம் வைத்துவிடுவது மிகவும் நல்லது. கூட்டுக் குடித்தனம் என்றால் அவர்கள் வாழ்க்கையை நுழைந்து பார்க்காமல் வேடிக்கை மட்டும் பாருங்கள். அவர்களாக சந்தேகம் கேட்டால் மட்டும் பேசுங்கள். தவறு செய்தாலும் பரவாயில்லை, அவர்களே தவறை உணர்ந்து திருத்திக் கொள்வார்கள்.

மருமகளுடன் சண்டை போடுவதன் மூலம் உங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கு முயல்கிறீர்களே தவிர, மகனுக்கு நீங்கள் நன்மை செய்யவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இந்த உண்மைகள் புரியாமல் மகன் நன்மைக்காகவே சண்டை போடுவதாகச் சொல்கிறார்கள். அதை மகனையும் நம்ப வைக்கிறார்கள். ஒருசில ஆண்கள் அம்மாவின் எமோஷனல் பிளாக்மெயிலில் சிக்கிக்கொள்கிறார்கள். அம்மாவுக்கும் மனைவிக்குமான முக்கியத்துத்தை புரிந்துகொள்ளாத ஆணுடன் வாழ முடியாது என்றே பெண் நினைக்கிறாள். அதனாலே சண்டை பெரிதாகி விவாகரத்து வரை செல்கிறது.

அன்பு என்ற பெயரில் பிள்ளைகளுக்கு விலங்கு மாட்டாதீர்கள். மகன் ஆனந்தமாக பறக்கட்டும்.


www.gyaanaguru.com

# புரூஸ் லீ 6 சிக்ஸ்

திரைப்பட நடிகர் மட்டுமல்ல, புரூஸ் லீ ஒரு தத்துவ ஞானி. 20ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த தற்காப்புக் கலை வல்லுநர் களில் ஒருவர். அவர் தனது திரைப்படங்களின் மூலமாகவும் வாழ்க்கை முறையின் மூலமாகவும் வெற்றிக்கான பாதைகளைக் காட்டியிருக் கிறார். ஆறு விஷயங்களே தன்னை வெற்றி அடைய வைத்தன என்று மனம் திறந்து பேசியிருக்கிறார்.

## உழைப்பே மந்திரம்

திறமையை விட உழைப்பு மீது நம்பிகை வைத்தார் புரூஸ் லீ. கடின உழைப்பின் மூலமாகவே வெற்றி பெற்ற தாகக் கூறினார். திறமையை மெருகேற்ற அவர் தினமும் பல மணி நேரம் பயிற்சி செய்தார். எதை அடைய விரும்பினாலும், அதற்காக கடினமாக உழைக்க வேண்டும். பெரிதாக அடைய வேண்டும் என்றால் மிகப்பெரிதாக உழைக்க வேண்டும் என்கிறார் புரூஸ்லீ.

## உங்களை நம்புங்கள்

தனது திறமைகளை ஆழமாக நம்பினார் புரூஸ்லீ. தன்னால் நிச்சயம் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையே அவரை வெற்றியை நோக்கி ஓட வைத்தது. திடமான நம்பிக்கை இருப்பவரால் எதை வேண்டு மானாலும் சாதிக்க முடியும். சாதனைக்கு எல்லையே இல்லை என்பதே புரூஸ்லீ வாக்கு.

## கத்துக்கிட்டே இருங்க

புரூஸ் லீ தன் வாழ்நாள் முழுவதும் புதிய விஷயங்க ளைக் கற்றுக்கொண்டே இருந்தார். உலகின் அத்தனை தற்காப்பு கலைகளையும் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டார். திறமை உள்ள நபர்களை எல்லாம் தேடிப்பிடித்துக் கற்றுக் கொண்டார். எதையும், எந்த வயதிலும் கற்றுக்கொள்ளலாம் என்பதற்கு உதாரணமாக வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருந்தவர் புரூஸ்லீ.

## மனசும் உடம்பும் ஆயுதம்

வெற்றிக்கு உடல் மற்றும் மன ஆரோக்கியம் மிகவும் முக்கியம் என்பதில் புரூஸ் லீ மிகவும் கவனமாக இருந்தார். உடலையும், மனதையும் வலுப்படுத்த ஆரோக்கியமான உணவுகளை உண்டார், தியானம் செய்தார். நன்றாகத் தூங்கினார். உடல் மற்றும் மன ஆரோக்கியம் இரண்டுமே ஒன்றோடொன்று இணைந்தவை. இதில் ஒன்று இல்லாமல் மற்றொன்றை சிறப்பாக வைத்திருப்பது சாத்திய மில்லாதது என்பதை எல்லோருக்கும் கற்பித்தார்.

## அமைதியே முக்கியம்

தனது கோபத்தைக் கட்டுப்படுத்துவதே கலை யின் முழுமை என்பதை கற்றுக் கொண்டார் புரூஸ்லீ. அவரை அத்தனை எளிதில் கோபப் படுத்திவிட முடியாது. எப்படிப்பட்ட சூழலிலும் அமைதியாக இருப்பதற்கு அவரால் முடியும் எனும் அளவுக்கு தன்னடக் கத்தைக் கடைபிடித்து வந்தார். நம்மை கட்டுப்படுத்திக் கொள்ள கற்றுக்கொண்டால் நாம் வாழ்க்கையில் பல சாதனைகளை செய்ய முடியும் என்று பாடம் சொல்லிக் கொடுத்தார்.

## புகழை தள்ளி வையுங்கள்

மிகப்பெரும் வெற்றிகள் பெற்ற பிறகும் அவர் புகழுக்கு அடிமை ஆகவில்லை. தன்னுடைய கனவுகளை நிறைவேற்று வதை நோக்கி மட்டுமே ஓடிக்கொண்டு இருந்தார். அவருக்கு வசதியான வாய்ப்புகளை மட்டுமே தேர்வு செய்தார். சினிமா வெற்றிக்கும் எனக்கும் பெரிய சம்பந்தமில்லை என்று விலகியே இருந்தார் புரூஸ்லீ.



www.gyaanaguru.com
www.gyaanaguru.com

# வார்த்தைகளே வரம்

### ஓஷோ

புத்தர் அமைதியைத் தேடி அரண் மனையை கைவிட்டார், நாமோ அரண் மனையைத் தேடி அமைதியை கை விடுகிறோம்

### பாப் மார்லி

நீ வாழும் வாழ்க்கையை நேசி. நீ நேசிக்கும் வாழ்க்கையை வாழ்

### டாக்டர் அம்பேத்கர்

பிச்சை கேட்பவனை கேவலமாகவும் தட்சணை கேட்பவனை சாமியாகவும் பார்க்கும் மூடர்கள் மனித இனத்தில் சாபக்கேடு

### அய்ன் ரேண்ட்

எதையும் கேட்காதே. எதையும் எதிர்ப்பார்க்காதே. எதை சார்ந்தும் வாழாதே. இது தான் சுதந்திரம்.

### கலீல் ஜிப்ரான்

பெருந்தன்மை என்பது முடிந்ததைவிட அதிகம் கொடுப்பது. பெருமை என்பது தேவையை விட குறைவாக எடுப்பது.

### மனுஷ்

வருத்தத்தினால் யாரும் பிரிந்து போகவில்லை. பிரிய வேண்டும் என்று விரும்பிய பிறகு வருத்தங்கள் உண்டாக்கப் பட்டன.

### எடிசன்

என் முயற்சிகள் என்னை கைவிட்டதுண்டு, நான் ஒரு போதும் முயற்சியை கைவிட்டதில்லை.

### அப்துல் கலாம்

கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை, கனவு மட்டும் காண்பவர்களே தோற்கிறார்கள்

### நபிகள் நாயகம்

மனிதரின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்தே பிறக்கின்றன

### தேவிபாரதி

கோபத்தை தாளிடப்பட்ட அறைக்குள்ளும் அன்பை பொது வெளியிலும் வெளிப் படுத்துங்கள்.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com



# Online கவுன்சிலிங்

**WhatsApp Call Only**

## கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

**மனவள ஆலோசகர்**

**எஸ்.கே.முருகன்**

**ஞானகுரு கவுன்சிலிங்.**

**முன்பதிவுக்கு : +91 80725 89355**

www.gyaanaguru.com